செ.வெ.எண்: 833/2016 நாள்: 26.11.2016

# பத்திரிக்கை செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவுப்படி 25.11.2016 தேதியன்று மாவட்ட உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, கூட்டுறவு சங்க பணியாளர்கள் மற்றும் நுகர்பொருள் வாணிபகழக பணியாளர்கள் அடங்கிய குழுக்கள் மூலம் ஒரே நேரத்தில் அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் ARS வெட்டூர்ணிமடம், PCB சரக்கல்விளை நியாயவிலைக் கடைகளிலும், கல்குளம் வட்டத்தில் PACB மேக்கமண்டபம், ARS மணலிக்கரை மற்றும் TEFSCS முரசன்கோடு ஆகிய நியாயவிலைக் கடைகளிலும், விளவங்கோடு வட்டத்தில் FSCS மங்கலகுன்று, KVTCMS மத்திகோடு மற்றும் PACB ஒளிப்பாறை ஆகிய நியாயவிலைக் கடைகளிலும் அதன் சுற்றுவட்டார பகுதிகளிலுள்ள வீடுகளிலும் போலி குடும்ப அட்டைகள் குறித்தும் நியாயவிலை அங்காடிகளின் செயல்பாடுகள் குறித்தும் 100% திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. தணிக்கையின் போது போலி என கண்டறியப்பட்ட 58 குடும்ப அட்டைகளுக்கு உணவு பொருள் நிறுத்தம் செய்யப்பட்டது. மேலும் இருப்புக்குறைவு, எடைகுறைவு மற்றும் போலிப்பட்டியல் போன்ற இனங்களில் முறைகேடு செய்யப்பட்ட நியாயவிலைக் கடை பணியாளர்களின் மீது ரூ.50,538/- அபராதம் விதித்து நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்,
(இ) நாகர்கோவில்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.